உ

கடவுள்துணை.

மைலாப்பூர்

கபாலீசர் பதிகம்.

கற்பகவல்லியம்மைபதிகம்,

இவை

பிருங்கிமாநகரம்

வேம்புலிமுதலியாரவர்கள்குமாரர்

நமசிவாய முதலியாரவர்களது

சென்னை சூளை

நிரஞ்சனவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1923

62

உ

கடவுள் துணை.

கபாலீசர் பதிகம்.

காப்பு—வெண்பா.

மண்டலத்தோர்சூழ மயிலைவாழ்கபாலீசர்
தண்டமிழ்ப்பாமாலைதனைச் சாற்றவே-அண்டம்பூ
தாடுணைவனேடுகோங் தாங்கிமகிழ்கூர்ந்திடுகூத்
தாடுமிளங்களிறே யாள்,

சொல்லரியசதுர்மறையின் முடிவினைதிணையடிக டுகிபுரியுமடியரினமா, நல்வர்களுளம்தனி னடனமிடு தெய்வமே நாதனே நாயடியனே, னல்லல்க ளறக்கருணைபுரிகின்ற நாளெந்த நாளோ வருந்திலேன்சீர், மல்லல்வன மோங்குதிரு மயிலையம் பதியினித மருவுறுக கபாலீசனே. க

கூவிளநறுங்கொன்றை மாலைபுனைசங்கரா குவலய மெலாந்தருமுமா, தேவியொரு புடைமேவு தேவனே சிறியனின் றிருவடிதொழாத பொல்லாப், பாவியெனினுங்கடைக் கண்பார்த் திரட்சைசெய் பாமுனக்கே பங்கய, வாவிசூழ்ந் திலகுதிரு மலையிலையம் பதியினிக மருவுறுகபாலீசனே. உ

கஞ்சனெடுகண்ணனும் காணவரிதாயமுக்கண்ணனே கடலில்வந்த, நஞ்சணிகளாசருதி நாயகா நாயி

னே ஞனிலந்தன்னிதமுஞ், சஞ்சலப்படுதனின் றண்
ணருட்கழகோ சதானந்தனே சம்புவே, மஞ்சளவுசோ
லைசூழ் திருமயிலையம்பதியின் மறுவுருகபாலீசனே, ௩
மின்னுசெஞ்சடைதன்னி லரவமோடறுகுமதிவே
ணியுமணிந்தவிமலா, என்னுடையமனவிரு ளகற்றிநின்
னதுதா ளிணைக்கன்யனுக்கியருள, இன்னுமெத்தனை
நாட்கள் செல்லுமோ வறிகிலே னென்செய்வ னெந்த
நாளு, மன்னுதிருமயிலையம் பதியிலுறை யடியார்க மரு
வுறுகபாலீசனே. ௪
ஐயனேயெனக்கருள்செ யப்பனேயென்றுநின தி
ணையடிக டொழுபவர்வினை, நையவேயருள் செய்யுநாக
பூஷணனேவி ணுடர்கடுதிக்கு மழுமான், லையனே
கடையனேன் கவலைதீர்த்தாள்வ தெக்காலமோ வறிகி
லேன்யான், வையமேத்தித் துதிசெய் திருமயிலையம்ப
தியிள் மருவுறுகபாலீசனே, ௫
பானன்மொழியாளுமையோர் பாகனேபரமனேப
கவனே பாபஅரனே, ஞானசொரூபாவடியர் நாடுபுனி
தாசெய்ய நளிப்பாதாதற்பரா, யினனெனை யாளவுன்
னுளமிரங்காவண்ணமே தெனக்குளவு புகலாய், வான
மளாவியமாட மல்குதிரு மயிலினின் மருவுறுகபா
லீசனே. ௬
பொங்குகடல்சூழுமிப் புடவிதனிலுழலுமென் புந்
தியை மயக்கிடுமலக், கம்குலறநின்கருணை யெனுஞான
வொளிதாறு காத்திடா விடிலடியனே, னெங்குசென்

றூர்க்குரைப் பேனெனுட்குறையெலா மினியேனு நீக்கி யருள்வாய், மந்துறவாழ்புன்னைவளர் திருமயிலையம்பதி யின் மருவுறுகபாலீசனே. எ

கறைமிடற்றண்ணலே கரைதிரையிலாதவுபர் கருணையங்கடலேபசுஞ், சிறையுடைக்கலபவுரு வாயம்மை பூசித்த செல்வமேசிறியனேனுட், குறைகளைந்தாளற்கு னுளமினுமிரங்காத கொள்கையேதோ வறிகிலேன், மறையவாசசெயமக நீடுதிருமயிலையம்பதியின் மருவுறு கபாலீசனே. அ

காரிகையர் காமவா ரிதிபடிந்தேறவொரு கரையறிகிலாதுழலுமிப், பூரியனினடியர்பணி விடைபுரியவருள் செய்பரி பூரணகமழ்கடுக்கைத், தாரிலகுமணிமார்பனே சுந்தரசேகரசதா சிவபராமாதமும், மாரிபொழிதிருமயிலையம்பதியினடியார்க மருவுறு கபாலீசனே, கூ

அளவரியவொருபரம் பொருளாகி நின்றிலகு மப்பனே வொப்பிலாயென், னுளமதனிலுறுதுயர்க ளுரைசெய வென்வசமலநி னுளமறியு மருள்புரிவையே, கோமளவுமையோடொரு விடையிலடியர்துய ரகலவரும் வள்ளலேதெள்ளமுதமே, வளமைமிகு திருமயிலை யம்பதியிலடியர்க மருவுறுகபாலீசனே. ய

திருமயிலைக் கபாலீர்பதிகம்.

முற்றிற்று,

சிவமயம்

காப்பு-வெண்பா.

திருமயிலைக் கற்பகவல்லியம்மை பதிகம்.

காரூர்பொழில்மயிலைக் கற்பகவல்லிக்கன்பார்ச்
சீரூர்பதிகம்யான் செப்பவருள்-சீரூரும்
கூத்தாடையாயளந்த கோபாலனுர்மருகா
கூத்தாடையானைமுகா கூர்ந்து.

நூல்.

மேகநிகரானகுழ லழகும்விற்கணையினுதல் விழியி
னழகும் பசியசெம், பூகமொப்பாகும் கழுத்தழகுமப்
புயப் போதனையினடியினழகும், சோகமிக்கிழிஞர்சூழு
விழைகடைபனேனுளத் துயரறக்காண்ப தென்றோ
மாகாளவியசோலை மயிலைகபாலீசர்பான் மருவுகற்பக
வல்லியே. க

பூசனைசெயடியர்வினை பொடிபடுத்திடுமன்ன பூர
ணிபுராந்தகிபுனை, நேசமுடனேதுதித் துனதுநாமங்க
ளென்னெஞ்சிற்பதித்தவுலகப், பாசமதறக்கருணை கூர்
சவுந்தரிபரா சத்திபார்வதி பகவதி, வாசவனேடமார்
துதி மயிலைக்கபானசர் மருவுகற்பகவல்லியே. உ

பூதரவிலேந்துபரி பூரணிதயாபரி புராதனிபவானி
பொல்லா, வேதமுடையேநினது பாதமலரேத்தவர்

மீது கிருபையிலாவிடிலெனங், காதாவதேதுபுக லந்தரி திரியம்பகி யகோரிபைரவிவாசி மாதர்கண்டிக்கு மயிலைக்கபாலீசர்பான மருவுகற்பகவல்லியே. ௩

அண்டாண்டங்களுக் கோரன்னையேயென்றநாவியேயாமுதமே, தண்டமிழ்சொன்மாலை சாத்துவோர்க்கருளுந் தயாபரி புராணகௌரி, விண்டையன்றெழுநளின சரணிசர்ப்பாபாணி விமலையென்வினைக ளைகுவாய், மண்டலந்துதிசெய் மயிலைக்கபாலீசர்பான் மருவுகற்பகவல்லியே. ச

பழுதினற்பத்தர்தம அதைையமாகுஞ்செய்ய பதுமவாசனிபூதல, முழுதுமுன்மிருநாழி நெற்கொண்டிாட்சிக்க முக்கணி திரிசூலியினியெப், பொழுதினருள் கூர்ந்தெனது புன்கணறமாற்றுவாய் புங்கவிபுவனேஸ்வரீ, மழுவலனிலங்கு மயிலைக்கபாலீசர்பான் மருவுகற்பகவல்லியே. ரு

வீரியபிராமிசிவ காமிகருணாகரி விண்டார்கடுதிக்குமிருசிங், காரிவிஸ்வேஸ்வரி சுபாகரி குணாகரிகடாக்ஷவீக்ஷணிபுனிதையோங், காரியுபகாரி ஒப்பாரிவரையனருள் கௌமாரியடியேனையாள், வாரியுடைநிலவுமயிலைக் கபாலீசர்பான் மருவுகற்பகவல்லியே, சு

சங்கரிசதானந்தி சுந்தரிசர்வேஸ்வரி சகஸ்த்ராபிதானிவாமி, சிங்கவாகனநீலி யந்தரீதுரந்தரீ திரோபதைதிரிபுரசுந்தரி, திங்களணி செஞ்சடில தேவிபகவதி

சச்சி தானந்தியகிலஜனனீ, மங்களாகரியருள் செய்மயி லைக்கபாலீசர் மருவுகற்பகவல்லியே. எ

பாம்பரிசனுர்த்தனர் சகோதரிசுகாரம்ப பர்வதே ஸ்வரிசுபத்திரி, ஈந்தரிநிராதாரி நீதசுந்தரிநிமலை நித்ய கல்யாணிநனினக், கரந்தனிற்கிளளையேந் தம்பிகையுரந் தரி காரசலாம்பரியானெனும், வரங்கடந்தருள்செய் மயிலைக்கபாலீசர்பான் மருவுகற்பக வல்லியே. அ

சத்தியம்பிகையம்மை யபிராணியமலைசிவை சாம ளையுருத்திரையுமை, பத்தியொடு தொழுமடி யவர்க்கரு ளிமயவல்லி பரைபராசத்திவிமலை, நித்திய நிரஞ்சனி நிதானி மரகதவல்லி நிற்குணிமனோன்மணிமலர், வத் திரயாமலை யருள்செய் மயிலைக்கபாலிசர் மருவுகற்பக வல்லியே. கூ

அம்புவியின்மைந்தர்பிழை யாயாமலாள்வது அன் னைதன்கடனுதலா, னம்பினேனுன்றனிரு நளினபொ ற்பாதமதை நாயினுங் கடையனேன்பா, னெனபிரா னாளுர்த மிடமேவுமன்னையே ஏங்கிடாதெனையாளு வாய்; வளபவிழ்மலர்ச்சோலை மயிலைக்கபாலீசர் மருவு கற்பகவல்லியே. ய

திருமயிலைக் கற்பகவல்லியம்மைபதிகம்.

முற்றிற்று.